www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -06
ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் 08.07.2024.

பொருள் பள்ளிக் கல்வி – நான் முதல்வன் திட்டம் – 2024 –2025 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசுமேல்நிலைப் பள்ளிகளில் உயர் கல்வி வழிகாட்டிக் குழு (Career Guidance Cell) செயல்படுத்துதல் – வாரந்தோறும் புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற உயர்கல்வி வழிகாட்டி வகுப்புகள் தொடர்பான பதிவு செய்யப்பட்ட பல்வேறு காணொளிகளை உயர் தொழில் நுட்ப ஆய்வக கணினியில் (Hi–Tech Lab Server) வைப்பது – தொடர்பாக.

பார்வை
1. தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் கடிதந.க.எண680/எல்1/CG4/MS/2023, நாள் 22.04.2024.
2. இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 23.04.2024.
3. தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் கடித ந.க.எண் 680/எல்1/CG–06/MS/2024, நாள் 22.04.2024.
4. தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் கடித ந.க.எண் 680/எல்1/CG–47/2024, நாள் 03.07.2024.

---------

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக நடப்பு கல்வியாண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக பள்ளி அளவில் உயர்கல்வி வழிகாட்டி வகுப்புகள் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வாரந்தோறும் புதன் கிழமை 9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு (1.20 PM to 2.00 PM & 2.00 PM 2.40 PM) மற்றும் வெள்ளிக்கிழமை 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு (2.50 PM to 3.30 PM & 3.00 PM 4.10 PM) இந்த நேரங்களில் வகுப்புகள் நடைபெற்று வருவதாகவும் மேற்படி வகுப்புகள் தொடர்பான பதிவு செய்யப்பட்ட பல்வேறு காணொளிகள் உயர்தொழில் நுட்ப ஆய்வக கணினியின் மூலமாக நடத்திட அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பார்வை 4ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உயர் கல்வி வழிகாட்டி வகுப்புகள் தொடர்பான காணொளிகளை அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தொழில் நுட்ப ஆய்வக கணினியில் (Hi–Tech Lab Server) ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திலே வைத்திட தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிட அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல் உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் சென்னை–6.– தகவலுக்காக அனுப்பப்படுகிறது.